1992 மார்ச் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 155, டாக்டர் அ. ஸ்ரீதரன், திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்,

155—

கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கு பணியமர்த்துவதில் முன்னுரிமை.

*1037 டாக்டர் அ. ஸ்ரீதரன் ;
திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலப்புத் திருமண தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பணியமர்த்துவதில் ஒரு சிறிய சதவீதம் ஒதுக்கி முன்னுரிமை வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், மருத்துவ பட்டமேற்படிப்பு பொறியியல் ஆகியவற்றிலும் அவர்களுக்கு தனியாக இடங்கள் ஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : அரசு ஒதுக்கீடு அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடப் பாரம்பரியத்தைக் காப்பாற்றி சமத்துவமும், சமுதாய மறுமலர்ச்சியும் சீர் தூக்கி நல்லாட்சி செய்கின்ற நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் கலப்புத் திருமண தம்பதிகளுக்கும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை யாவது வேலைவாய்ப்பிலும், பட்ட மேற்படிப்பிலும் நிரந்தரமாக ஒவ்வொரு தேர்விலும் அமைத்துத் தர வேண்டுமென்று. ஒரு குறிப்பிட்ட பர்சென்டேஜை அமைத்துத் தர வேண்டுமென்று கட்டாயமாக ஒரு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு தாயின் ஜாதியையோ அல்லது தந்தையின் ஜாதியையோ சார்ந்தவர்களாகக் கருதப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால்

தாயோ அல்லது தந்தையோ தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்திருந்தால் அவர்களின் குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைஜாதியினரைச் சார்ந்திருந்தால் மலைஜாதியினருக்குக் கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும், முன்னுரிமைகளும் பணி அமர்த்துவதிலே கொடுக்கப்படும். அதைப்போல, கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு, எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு 12 இடங்களும், சித்த மருத்துவப் படிப்பிற்கு 2 இடங்களும், ஹோமியோபதி மருத்துவப் படிப்பிற்கு 1 இடமும், யுனானி மருத்துவப் படிப்பிற்கு 1 இடமும், பி.ஈ. பட்டப் படிப்பிற்கு 5 இடங்களும் அரசால் கொடுக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 10-40

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் போன்றவர்கள் இந்த மைக்கில் பேசுகிறபோது, மென்னியே கட்டிக் கொள்கிறது; சடார் என்று வரவில்லை. (சிரிப்பு) ஆம் வரவில்லை ; பேசமுடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாலையே உங்களை மருத்துவரை விட்டு, பரிசோதிக்கச் செய்யலாம். (சிரிப்பு).

திரு. எம். ஆண்டி அம்பலம் : கலப்புத் திருமணம் என்பது பெரிய விஷயம். அவர்களுக்கு மிகவும் முன்னுரிமை தர வேண்டும். அதிலும் குறிப்பாக, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1 இடம், 2 இடம், 12 இடங்கள் என்று. அது போதுமானதாக இல்லை. ஏனென்றால், ஆண் பெண் இரண்டுதான் ஜாதி என்று சொல்லக்கூடிய அளவிலே கலப்புத் திருமணம் செய்கிறவர்களுக்கு ஒரு நல்ல முன்னுரிமையை இந்த அரசாங்கம் தர வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கேட்டு, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பதிவு செய்திருந்தால், அங்கிருந்து அரசு வேலைகளுக்கு பட்டியல் அனுப்பப்படுகிறபோது, அவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்கிற ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கிற மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு, வேறெந்த கோரிக்கைகளைக் கொடுத்தாலும், அவை சரியானதாக இருந்தால், நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

1992 மார்ச் 10]

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த ஒருவரும், இதர ஜாதியைச் சார்ந்த ஒருவரும் திருமணம் செய்து கொண்டால் மட்டும் அது கலப்புத் திருமணம் என்று கருதப்படுகிறதா ? இரண்டு வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவரார்க இருந்தால், அவர்கள் திருமணம் செய்து கொண்டால், அது கலப்புத் திருமணம் ஆகாதா ? இரண்டு பேர்களில் ஒருவருடைய ஜாதியை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால், ஜாதிகள் ஒழிவதற்கு மார்க்கம் இல்லாமல் இருக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு 'தமிழன்' என்று பெயர் சூட்டி அவர்களுக்கு முழுச் சலுகையை படிப்பு, வேலைவாய்ப்பின் மூலம் ஊக்குவித்தால், ஜாதி ஒழிய மார்க்கம் இருக்கிறது. ஆகவே, மீண்டும் ஆதி திராவிடர் அல்லது இதர ஜாதி என்று உருவாக்காமல் தமிழன் என்ற ஒரே ஜாதியை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்கிற அடிப்படையிலேதான், முற்பட்ட ஜாதி, பிற்பட்ட ஜாதி என்று இருக்கக்கூடாது என்கிற அடிப்படையிலேதான், இந்த முன்னுரிமைகள் எந்த ஜாதியைச் சார்ந்தவர்களும் திருமணம் செய்து கொண்டாலும் அரசால் வழங்கப்படுகின்றன. தம்பதியரில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராகவும், மற்றவர் முற்பட்ட வகுப்பினராகவோ அல்லது பிற்பட்ட வகுப்பினராகவோ இருந்தாலும் இந்த முன்னுரிமைகள் வழங்கப்படுகின்றன. தம்பதியரில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும், மற்றவர் பிற்பட்ட வகுப்பினராகவும் இருந்தாலும் இந்த முன்னுரிமைகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 156, திரு. கி. தர்மலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

156—

ஜவ்வாது மலை அடிவாரத்தில் கால்நடை வளர்ப்புப் பண்ணை.

4174 திரு. கி. தருமலிங்கம் :

மாண்புகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அணைக்கட்டு தொகுதி, ஜவ்வாது மலை அடிவாரத்தில் உள்ள அத்திக்குப்பம் கிராம புல எண். 136-ல் 219 ஏக்கர் அரசு நிலம் உள்ளதால் அந்த இடத்தில் கால்நடை வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவை தலைவர் **அவர்களே,**